செ.வெ.எண்:18 நாள்:08.09.2021

**கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பரிதவிப்புடன் வந்த வயதான நடக்க முடியாத முதியவரை பரவசத்துடன் அனுப்பி வைத்தார் - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள்**

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு இன்று (08.09.2021) பிற்பகல் வெள்ளியணை (வடபாகம்) பகுதி திருமலை நாதன் பட்டியைச் சேர்ந்த 66 வயதான நடக்க இயலாத நிலையில் இருந்த திரு.மூக்கன் த/பெ பாப்பா நாயக்கர் என்பவர் வந்திருந்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்திற்குள் வரும் வழியில் பரிதாப நிலையில் இருந்த நடக்க இயலாத முதியவரை கண்டு அவரிடம் சென்று எதற்காக வந்துள்ளீர்கள் என விசாரணை செய்தார். திரு.மூக்கன் அவர்கள் தனக்கு திருமணம் ஆகவில்லை, தனியாக வாழ்ந்து வருகிறேன், என்னால் கடந்த ஆறு ஆண்டுகளாக நடக்க இயலாமல் போய்விட்டது, எனக்கு உதவி செய்ய யாரும் இல்லை, மாவட்ட ஆட்சியர் அவர்கள் எனக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்தார். அவரது தோற்றம் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையை கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் அவர்களிடம் முதியவருக்கு தகுதியின் அடிப்படையில் உடனடியாக நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்

அதனடிப்படையில் கரூர் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் மூலம் உடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஒரு மணி நேரத்தில் அவருக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கும் முதியோர் உதவித்தொகைக்கான உத்தரவு மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் ரூபாய் 6500 மதிப்புள்ள சக்கர நாற்காலியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தரை தளத்திற்கு நேரில் வந்து முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவையும், சக்கர நாற்காலி மற்றும் புத்தாடைகளை திரு முக்கண் அவர்களிடம் வழங்கினார். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் பரவசத்துடன் பெற்றுக்கொண்டார். பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அவரை தனி காரில் அவரின் செந்த ஊருக்கு அனுப்பிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு .சைபுதீன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.காமாச்சி, கரூர் வட்ட சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு ஈஸ்வரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**